*செய்தி வெளியீடு எண் :41* *நாள் :26.11.2019*

**தேனி மாவட்டம்**

**சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கான முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்தாய்வுக் கூட்டம் 29.11.2019 அன்று நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-**

******

*தமிழக அரசின் உத்தரவின்படி, தேனி மாவட்டத்தில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதை ஊக்குவிக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதற்கும், ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவி வழங்கப்படவுள்ளது.*

*தேனி மாவட்டத்தில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 3 தொழிற்கூடங்களுடன் குறைந்த பட்சமாக 2 ஏக்கர் நிலத்தில் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா (Mini Textile Park) அமைக்கும் திட்டத்தினை உடனடியாக செயலாக்கம் செய்ய ஏதுவாக தகுதி வாய்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்தாய்வுக் கூட்டம் தேனி மாவட்ட ஆட்சியரக வளாக கூட்ட அரங்கில் 29.11.2019 அன்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற உள்ளது.*

*எனவே முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி சிறிய துணிநூல் பூங்கா தொடர்பான கோரிக்கைகளுடன் மேற்படி கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டும், மேலும் கூடுதல் விபரங்களுக்கு மதுரை, செனாய்நகர், கக்கன் தெரு கதவிலக்கம் 29-இல் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்தினை (தொலைபேசி:0452-2535669) தொடர்பு கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***